சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.08.04.2025
OS.No.174/2019 c/w O.S.127/2023 c/w O.S.128/2023
DW 1 : ராஜவேல் (வயது 57 ) த/பெ.சாத்தமுத்து
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>வாதி தரப்பு கு.வி</u>

தாவா சொத்து இலக்கம் 254ல் இருப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். எனது நிருபண வாக்குமூலத்தில் நான் கூறுவது போல் எந்த ஆவணமும் பட்டியலிடபடவில்லை என்றால் என்ன சொல்வதென்று தெரியவில்லை. உண்மையில் தாவா கதவு இலக்கம் 254 ல் நான் குடியிருப்பதற்கு ஆவணம் இருந்திருந்தால் அதனை தாக்கல் செய்திருப்பேன் என்றால் அந்த இடத்தை நான் தான் உபயோகம் செய்து வருகிறேன். மேற்படி தாவா கதவு இலக்கத்தில் நான் குடியிருக்கிறேன் என்று சொல்வதற்கு ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் உள்ளது, இரண்டு EB சர்வீசிற்கும் நான் தான் பணம் செலுத்தி வருகிறேன். மேற்படி EB க்கு பணம் செலுத்தி வருகிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்கிறேன். எனது நிருபண வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில் 01.10.2018 ஆம் தேதியன்று வாடகை ஒப்பந்தம் ஆரம்பித்து அது முதல் நான் வாடகை தாரராக இருந்து வருவதாக கூறுவதற்கு வாடகை ஒப்பந்த ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை, வங்கி கணக்கு எண் கொடுத்தார் அதில் வாடகையை செலுத்தி வருகிறேன். எனது வழக்கு அ.வ.எண். 127/2023ல் தாவா சொத்தில் வாய்மொழி ஒப்பந்தம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.வ.எண்.127/2023 வழக்கில் வீட்டின் உரிமையாளர் அனுமதி இல்லாமல் எந்த ஒரு மராமத்து பணியும் செய்ய முடியாது என்றால் சரிதான். நான் அதுபோன்று எந்த காரியமும் நான் செய்யவில்லை. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது 11.02.2025 அன்று CCTV Camera வழக்கு சொத்தில் எதன் அடிப்படையில் பொறுத்தியுள்ளேன் என்றால் எனது வீட்டினை சட்ட விரோதமாக பூட்டு

போட்டிருந்தார்கள் அதனால் சிசிடிவி கேமரா பொருத்தியுள்ளேன். அவ்வாறு சிசிடிவி கேமரா பொறுத்துவதற்கு உரிமையாளரிடமோ அல்லது நீதிமன்றத்திலோ வழக்கு நிலுவையில் இருப்பதால் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. சட்ட விரோதமாக வீட்டை பூட்டியதால் நான் கேமரா பொருத்தியுள்ளேன். எனது நிருபண வாக்குமூல பாரா 2 ல் 01.06.2019 ஆம் தேதி வாதியும் அவரது மகனும் என்னை பலவந்தமாக தாவா சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சித்ததாக கூறியுள்ளேன் என்றும் அதற்கு காவல் நிலையத்தில் வாதி மற்றும் அவர் மீது புகார் கொடுத்துள்ளேனா என்றால் நான் புகார் கொடுக்கவில்லை, அவர்கள் தான் புகார் கொடுத்தார்கள். நான் கூறுவது போல் மிரட்டவில்லை என்பதால் தான் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு அ.வ.எண். 127/2023 ல் 01.07.2019 அன்று வாதியும் அவரது மகனும் மிரட்டி சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சித்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வித வழக்கு மூலம் இல்லாமல் சட்ட விரோதமாக வாதி தரப்பில் எந்த ஆவணங்களும் எனக்கு நிறைவேற்றி கொடுக்காத நிலையில் வழக்கில் சட்ட விரோதமாக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து என்பது குடியிருக்கக்கூடிய வீடு என்றால் சரிதான். குடியிருக்கிறேன். எனது நிருபண வாக்கு மூலத்தில் M/S.RNSJ Services Pirvate Ltd என்ற நிறுவனத்தை இயக்கி வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும் தற்போதைய வழக்கின் வாதிக்கும் அ.வ.எண்.127/2023 வழக்கின் பிரதிவாதிக்கும் எதிராக தாவா சொத்தில் M/S.RNSJ Services Pirvate Ltd என்ற நிறுவனத்தை இயக்கி வருவதாக கூறி தான் நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான் ஆனால் மேற்படி நிறுவனத்தை செயல்பட அவர்கள் விடவில்லை. எனது நிருபண வாக்குமூலத்ததில் தாவா சொத்தில் குடியிருக்கவும், வியாபாரத்திற்கு பயன்படுத்தவும் வாதி ஒப்புக்கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் கூறுவதற்கு எழுத்து மூலமான ஆதாரம் உள்ளதா என்றால் இருக்கிறது. ஒரு நாள் வந்து வாதி கையெழுத்து செய்து

கொடுத்துவிட்டு போனார். 2019 ஜுன் மாதமே என்னை தாவா சொத்தை விட்டு வாதி காலி செய்ய சொல்லிவிட்டார் என்றும் எந்த ஒரு கையொப்பமும் செய்து மேற்கொண்டு குடியிருப்பதற்கு வாதி அனுமதிக்காத நிலையில், கையொப்பம் இருப்பதாக நான் கூறுவது வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கையொப்பம் இருந்திருந்தால் அதனை இந்த வழக்கிலும் அ.வ.எண்.127/2023 வழக்கிலும் தாக்கல் செய்திருப்பேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதியின் கையொப்பத்தை கம்பெனி நடத்துவதற்கு மோசடியாக தயார் செய்து அந்த ஆவணத்தை கொண்டு தில்லை நகரில் உள்ள ஒரு வங்கியில் கடன் பெற்றும், ராம்ஜி நகரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் கடன் பெற்றிருந்ததை தெரிந்த உடன் வாதி எனக்கு எதிராக திருச்சி, காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளித்து அந்த புகார் விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. பின்னிட்டு சாட்சி என்னை அழைத்து விசாரித்தார்கள் அதுபோன்று எந்த செயலிலும் நான் ஈடுபடவில்லை என்று கூறிவிட்டதாக கூறுகிறார். வாதிக்கும் அவரது மகனுக்கும் தாவா சொத்தின் சுவாதினம் தேவைப்படுகிறது என்று கூறியும் நான் தாவா சொத்தை காலி செய்ய மறுத்து அதில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2019 ஜுன் மாதத்திற்கு முன்பு வாடகை கொடுக்க வேண்டிய தொகையை காசோலையாக நான் கொடுத்து அதில் பணம் இல்லாமல், அந்த காசோலை திருப்பப்பட்டதால் வாதி திருச்சி, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்1. ல் சி.சி.720/2020, என்ற வழக்கினை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், நான் பணத்தை வங்கியில் செலுத்தி அதற்கான தொகையை வாதி எடுத்த போதிலும் என் மீது வழக்கு தாக்கல் செய்துவிட்டார். எனது நிருபண வாக்குமூலத்தில் ரொக்கமாகவும், வங்கி மூலமாகவும் பணம் கொடுத்ததாக கூறுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் தற்போதைய வழக்கிலும் அ.வ.எண்.127/2023 வழக்கிலும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் ஆவணங்களை கொடுத்துள்ளேன், அவர்கள் தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு தெரியவில்லை. எனது நிருபண

வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். நான் தற்போது சாட்சியம் அளித்துள்ள விவரங்களை பற்றியும் அதற்கான ஆவணங்களை பற்றியும் எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வழக்கு தாக்கல் செய்த பிறகும், தாவா சொத்தில் நான் உள்வாடகைக்கு விட்டு அதன் மூலம் இரவு 11 மணியளவில் 15 நபர்கள் தாவா சொத்தில் உள்ளே தங்க வைத்து சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. இரவில் அதிகமான வாகனங்களும் தாவா சொத்தின் முன்பு நிறுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதினத்தை பெறுவதற்கு வாதிக்கு உரிமை உள்ளது என்றும், தாவா சொத்தில் சட்ட விரோதமாக வாதியின் அனுமதி இல்லாமல் இருந்து வருவதால் தாவா சொத்தை காலி செய்து வாதிக்கு நான் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா இலக்கம் 254 ல் நான் குடியிருப்பதற்கு, வாய்மொழி அனுமதியோ, எழுத்து மூல அனுமதியோ வாதியால் கொடுக்கபடவில்லை என்றால் சரியல்ல. எனது அ.வ.எண்.127/2023 வழககில் கதவு எண்.254 க்கு மட்டும் தான் வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, 2 வீட்டிற்கும் சேர்த்து வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்குரை சொத்து விவரத்தில் கதவு எண்.254 க்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இரண்டு இடத்திற்கும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் ஆனால் கதவு எண்.254 என்று மட்டும் தான் வழக்குரை சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கதவு எண்.252 தென்பகுதியில் உள்ள சொத்து என்றும் 254 வட பகுதியில உள்ள சொத்து என்றால் சரிதான். மேற்படி இரு வீடுகளும் தனி தனி வீடுகளாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் ஒரே சுற்று சுவரில் அமைந்துள்ளது. தாவா சொத்தில் நான் குடியிருப்பதற்கு எந்த அதிகாரமும், சட்ட உரிமையும் கிடையாது என்றும் எனவே வாதிக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.127/2023 வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதி தாக்கல் செய்துள்ள தாவா

அ.வ.எண்.128/2023 மற்றும் அ.வ.எண்.174/2019 வழக்குகள் வாதிக்கு ஆதரவாக அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/ signed /
ராஜவேல்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி